**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 193/2021
Prosecution side witness for P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. ஆரோன்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.03.2026**

A1, A2 are present.

**முதல் விசாரணை:–**

நான் கடந்த 5, 6 வருடங்களாக தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தாலுகா, அடைக்கலாபுரம் மேலத்தெருவில் வசித்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் பண்டாரவிளை ஆகும். இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன செல்வகுமார் என்ற செல்லக்குட்டி எனது தம்பி ஆவார். அவர் எனக்கு அடுத்து 4 வதாக பிறந்தவர் ஆவார். ஆஜர் எதிரிகளைத் தெரியும். 1 ம் எதிரி பெயர் பட்டுப்பாண்டி, 2 வதாக நிற்பவர் பெயர் பெருமாள். ஆஜர் எதிரிகளுக்கும், எனது தம்பிக்கும் என்ன பிரச்சனை என்று கேட்டால் 2019 ஆம் ஆண்டு 4 ம் மாதம் முதலில் என் தம்பி செல்வகுமாரை பண்டாரவிளை இந்துநாடார் சங்கத்தின் அருகே வரும்போது பண்டாரவிளையை சேர்ந்த விக்கி என்ற விக்னேஷ்ம், ராஜாவும் சேர்ந்து என் தம்பியை செல்வகுமார் என்ற செல்லக்குட்டியை அடித்துவிட்டார்கள். அதனால் அவனுக்கு தலையில் அடிபட்டு ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகியிருந்தான். அது சம்மந்தமாக மேற்படி ராஜா,

விக்கி என்ற விக்னேஷ் பெயரிலும் நான் புகார் கொடுத்து ஏரல் காவல்நிலையத்தில் கேஸ் போட்டார்கள். ஜெயிலில் இருந்தவர்களை எதிரிகளின் தம்பியான உத்தரகுமார் என்பவர் மேற்படி ராஜாவையும், விக்கி என்ற விக்னேஷ் ஜாமீனில் வெளியே எடுத்தான். அதனால் என் தம்பி செல்வகுமார், எதிரிகளின் தம்பியான உத்தரகுமார் மீது கோபம் கொண்டான். அதனால் 2019 ஆம் வருடம் 9 ஆம் மாதத்தில் முதலில் என் தம்பி அடிபட்ட 5 மாதங்கள் கழித்து அதே இந்துநாடார் சங்கம் அருகில் வைத்து என் தம்பி செல்வகுமார் உத்தரகுமாரை அடித்துவிட்டார். அதுதான் என் தம்பிக்கும், எதிரிகளுக்குமுள்ள பிரச்சனை ஆகும். 27.12.2020 ஆம் தேதி நானும், எனது தம்பியும் சாய்காலம் சரக்கு அடிப்பதற்காக எனது தம்பி வீட்டிலிருந்து பன்றி இறைச்சியை டப்பாவில் எடுத்து வைத்துக்கொண்டு பண்டாரவிளை மேலக்காடு பனங்காட்டில் எனது தம்பி வண்டியான பஜாஜ் பல்சர் கருப்பு கலர் வண்டியில் 14 என்று வரும் நம்பர் தற்போது ஞாபகமில்லை அங்கு யோவான் என்பவர் பதநீர் காய்க்கும் விடுதிக்கு வடபுறம் உள்ள தங்கபாண்டி என்பவருக்குரிய இடம் என்றுசொன்னார்கள், அது அடைப்பு இல்லாமல் வீதியாக இருந்தது, அங்கு சென்றோம். அதற்கு முன்பே 4 பேர் பண்டாரவிளையை சேர்ந்த தர்மராஜ், சதிஷ், குரு, ராஜன் ஆகியோர்கள் அங்கே தண்ணி அடித்து கொண்டிருந்தார்கள். அவர்களுடன் நாங்களும் உட்கார்ந்து மது அருந்திக்கொண்டிருந்தோம். அப்போது சுமார் மணி 6.00 மணி இருக்கும். அப்போது ஆஜர் எதிரிகள் இருவரும் Hero Honda பைக்கில் வந்தார்கள். 1ம் எதிரி பட்டுபாண்டி என்பவர் கையில் சவுக்கு கம்பு வைத்திருந்தார். அவரது தம்பி 2ம் எதிரி கையில் இரும்பு பைப் வைத்திருந்தார். என் தம்பியை பார்த்து நீதானே தேவடியா மவனே என் தம்பியை அடித்து கொல்லபார்த்தது, நீ உயிரோடு இருக்க கூடாது சாவுல தேவடியா மவனே என்று சொல்லி

சவுக்கு கட்டையை வைத்து 1ம் எதிரி மண்டையில் மாறி மாறி அடித்தார். 2ம் எதிரி இரும்பு பைப்பை வைத்து கைகளிலும், தலையிலும் மாறி மாறி அடித்தார். தலை முழுவதும் சிதைந்து போய்விட்டது. பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர்களும் பிடிக்க சென்றபோதும், திருப்பி அவர்களை அடிக்க போனார்கள், நான் அவர்களை பிடிப்பதற்காக அழைத்தேன், அவர்கள் தூரமாக தள்ளி போய்விட்டார்கள். நான் பிடித்து பார்த்தேன், என்னால் பிடிக்க முடியவில்லை. எனக்கு தோள்பட்டையில் ஒரு அடி விழுந்தது, ஆனால் இரத்தக்காயம் இல்லை. அவர்கள் வைத்திருந்த கட்டையை என் தம்பி தலையின்மீது போட்டுவிட்டு இரும்பு பைப்புடன் அவர்கள் வந்த பைக்கிலேயே சென்றுவிட்டார்கள். என் தம்பியை நான் பார்த்தபோது என் தம்பி தலை சிதைந்து கிடந்தான். அதன்பிறகு நான் என் தம்பியின் மனைவி சாந்தாவிற்கு போன் செய்து தகவல்சொல்லிவிட்டு, என் தம்பி மனைவி வந்து பார்த்துவிட்டு, ஸ்டேசனுக்கு வந்தாள். நானும், எனது தம்பியின் மனைவியும் நடவடிக்கை எடுக்கக்கேட்டு புகார்மனு எழுதிக்கொடுத்தோம். அந்த புகார்மனு என்னிடம் நீதிமன்றத்தில்காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–1** ஆகும். அதில்அறிவேன் சாட்சியாக என் தம்பியின் மனைவி சாந்தா போட்டுள்ளார். என் தம்பி கொலையுண்ட அன்று காப்பி கலரில் கோடுபோட்ட சட்டையும், காபி கலர் சாரமும் அணிந்திருந்தார். என் தம்பி சாரம் அவிராமல் இருப்பதற்காக பெல்ட் அணிந்திருந்தார். வெள்ளை கலர் பனியன் இரத்தமாகிவிட்டது. என் தம்பி அணிந்திருந்த ஆடைகள் மற்றும் எதிரிகள் கொலைக்கு பயன்படுத்திய ஆயுதங்கள், அவர்கள் வந்த வாகனங்களை பார்த்தால் அடையாளம் காட்ட இயலும். அவைகள் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் இரத்தக்கறை படிந்த காப்பி கலரில் கருப்பு கோடுபோட்ட சட்டை கிழிந்த நிலையில் **(சொத்துப்பட்டியல் வரிசை எண்.1ல் உள்ளது)**

**அ.சா.பொ.1** ஆகும். இரத்தக்கறை படிந்த வெள்ளை நிற பனியன் கிழிந்த நிலையில் உள்ளது **(சொத்துப்பட்டியல் வரிசை எண்.2ல் உள்ளது)** **அ.சா.பொ.2** ஆகும். இரத்தக்கறை படிந்த கருப்பு கலரில் காப்பி கலர் டிசைன் போட்ட லுங்கி ஒன்று **(சொத்துப்பட்டியல் வரிசை எண்.3ல் உள்ளது)** **அ.சா.பொ.3** ஆகும். கருப்பு கலர் பெல்ட் ஒன்று சம்பவத்தின்போது என் தம்பி அணிந்திருந்ததாகும் **(சொத்துப்பட்டியல் வரிசை எண்.5ல் உள்ளது)** **அ.சா.பொ.4** ஆகும். சுமார் 73 செ.மீ நீளமுள்ள இரத்தக்கறை படிந்த சவுக்கு கம்பு ஒன்று **(சொத்துப்பட்டியல் வரிசை எண்.8ல் உள்ளது)** **அ.சா.பொ.5** ஆகும்.(இது 1ம் எதிரி என் தம்பியை அடித்து கொலை செய்ய பயன்படுத்தியதாகும்). இரத்தக்கறை படிந்த சுமார் 53 செ.மீ நீளமுள்ள இரும்பு பைப் ஒன்று **(சொத்துப்பட்டியல் வரிசை எண்.10ல் உள்ளது)** **அ.சா.பொ.6** ஆகும். TN92 B 1404 என்ற எண் கொண்ட கருப்பு கலர் பஜாஜ் பல்சர் இருசக்கரவாகனம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது **(சொத்துப்பட்டியல் வரிசை எண்.9ல் உள்ளது)** **அ.சா.பொ.7** ஆகும்.(இந்த வண்டி என் தம்பி பயன்படுத்தியதாகும்). TN69 AA 5593 என்ற எண் கொண்ட Hero Honda splender plus இருசக்கரவாகனம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது **(சொத்துப்பட்டியல் வரிசை எண்.11ல் உள்ளது)** **அ.சா.பொ.8** ஆகும்.(இந்த வண்டி 1ம் எதிரி பட்டுப்பாண்டி அவரது தம்பியும் சம்பவத்தின்போது பயன்படுத்தியதாகும்). இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>(எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு அளித்தபோது குறுக்குவிசாரணை இல்லை என சொன்னதன் அடிப்படையில் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 193/2021
Prosecution side witness for P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. தர்மராஜ்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.03.2026**

A1, A2 are present.

**முதல் விசாரணை:—**

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், பண்டாரவிளை மேலத்தெருவில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன செல்வகுமார் என்ற செல்லக்குட்டி எனக்கு தெரியும். அவர் எனது ஊர்க்காரர். ஆஜர் எதிரிகளை தெரியும். எங்கள் ஊரை சேர்ந்தவர்கள்தான். ஆஜர் எதிரிகளுக்கும், இறந்துபோன செல்வகுமாருக்கும் என்ன பிரச்சனை என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. செல்வகுமார் கொலை வழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும், நான் என்ன நேரில் பார்த்தேன் என்றால் எனக்கு ஒன்றும் தெரியாது. சாட்சி அ.சா.1 ஆரோன் தெரியும். சாட்சிகள் சதிஷ், ராஜன், குரு ஆகியோர்களை தெரியும், அவர்களும் எங்கள் ஊர்க்காரர்கள்தான். செல்வகுமார் கொலையை நான் நேரில் பார்க்கவில்லை. எனக்கு ஒன்றும் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார்என்னை

விசாரிக்கவில்லை. செல்வகுமார் எப்படி இறந்தான் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 2019 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் எங்கள் ஊர் இந்து நாடார் சங்கத்தின் அருகே வைத்து எங்கள் ஊரை சேர்ந்த விக்னேஷ் மற்றும் ராஜாசிங் இருவரும் கம்பால் இறந்துபோன செல்வகுமாரை அடித்துவிட்டார்கள் என்றும், அதனால் அவர்கள் மீது ஏரல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்து இருவரையும் சிறையில் அடைத்தார்கள் என்றும், பின்பு அந்த இருவரையும் அவரது நெருங்கிய நண்பரான உத்தரகுமார் என்பவர் இருவரையும் ஜாமீனில் வெளியே எடுத்தார் என்றும், இதனால் செல்வகுமார், உத்தரகுமார் மீது கோபம் கொண்டு அதே 2019 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் அதே இடத்தில் வைத்து செல்வகுமார், உத்தரகுமாரை அடித்தது சம்மந்தமாக உத்தரகுமாரின் அண்ணன் தங்கராஜ், செல்வகுமார் என்ற செல்லக்குட்டி மீது ஏரல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அவன் மீதும் கேஸ் போட்டார்கள் என்றும், இதனால் மாறி மாறி அவர்களுக்கிடையே விரோதம் இருந்து வந்ததால் 27.12.2020 ஆம் தேதி சாயங்காலம் நானும் எங்கள் ஊரை சேர்ந்த சதிஷ், ராஜன், குருசித்திரங்கன், ஆகியோர்கள் நாங்கள் வழக்கமாக தண்ணி அடிக்கக்கூடிய எங்கள் ஊர் மேல பனங்காடு யோவான் பதநீர் காய்ச்சும் விடிலுக்கு வடபுறம் உள்ள தங்கபாண்டி நாடார் என்பவரின் பனங்காட்டிற்கு சென்று மது அருந்திக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது மேற்படி அ.சா.1 ஆரோனும் இறந்துபோன செல்வகுமார் என்ற

செல்லகுட்டியும் TN92 B 1404 என்ற பஜாஜ் பல்சர் பைக்கில் தண்ணி அடிப்பதற்காக வந்தார்கள் என்றும், நாங்கள் அனைவரும் சேர்ந்து மது அருந்தி கொண்டிருக்கும்போது சாயங்காலம் சுமார் 6.00 மணியளவில் மேற்படி ஆஜர் எதிரிகளான மேற்படி உத்தரகுமாரின் உடன் பிறந்த சகோதரர்களான பட்டுப்பாண்டியும், அருண்குமார் என்ற பெருமாளும் கையில் உருட்டு சவுக்கு கம்புமற்றும் இரும்பு பைப்புடன் TN69 AA 5593 என்ற பதிவெண் கொண்ட Hero Honda splender plus பைக்கில் அங்கு வந்தார்கள் என்றும், வந்தவர்கள் செல்வகுமார் என்ற செல்லக்குட்டியை பார்த்து ஏல தேவடியா மவனே நீதானே என் தம்பியை அடித்து கொல்ல பார்த்த கூதிமவனே நீ உயிரோடு இருக்ககூடாது இதோடு செத்து தொலை என்று சொல்லி மேற்படி 1ம் எதிரி பட்டுப்பாண்டி தன் கையிலிருந்த கம்பால் செல்வகுமாரின் தலையின் முன்பகுதியில் இடது பக்கம் ஓங்கி அடித்ததில் இடது பக்கம் நெற்றிவரை பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், மேற்படி 2ம் எதிரி அருண்குமார் என்ற பெருமாள் தன் கையில் வைத்திருந்த இரும்பு பைப்பால் செல்வகுமாரின் முகத்தில் ஓங்கி அடித்ததில் இடது பக்க நாடியிலும், இடது பக்க கீழ்உதட்டியிலும் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், பின்னர் அவர்கள் இருவரும் சேர்ந்து செல்வகுமாரின் முகத்தில் மாறி மாறி அடித்ததில் அவரது முன்னந்தலை இடது பக்கம் வலது கண் புருவம் மற்றும் தலை சிதைந்து கீழே சாய்ந்து விட்டார் என்றும், அதை பார்த்த நானும், என்னுடன்இருந்த ஆரோன், சதிஷ், குருசித்தரங்கன், ராஜன், தங்கவேல்ஆகியோர்கள் அவர்கள் இருவரையும் சத்தம் போடவும், இருவரும் ஏல புண்ட மக்களா நீங்களும் கிட்டே வந்தால் உங்களையும் அடித்து கொன்றுவிடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்து மரண பயத்தை ஏற்படுத்திவிட்டு பட்டுபாண்டி வைத்திருந்த கம்பை செல்வகுமார் மீது வீசிவிட்டு, அருண்குமார் என்ற

பெருமாள் வைத்திருந்த இரும்பு பைப்புடன் அவர்கள் வந்த பைக்கிலேயே ஏறி சென்றுவிட்டார்கள் என்றும், மேற்படி எதிரிகள் இருவரும் செல்வகுமாரை அடித்ததில் அவன் தலை சிதைந்து அந்த இடத்திலேயே இறந்துபோய்விட்டான் என்றும், இது சம்மந்தமாக மேற்படி ஆரோன் எதிரிகள் இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க ஏரல் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சென்றார் என்பதை தெரிந்து கொண்டோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு நாங்களும் எதிரிகளும் ஒரேஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்துபொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. <u>(எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு அளித்தபோது குறுக்குவிசாரணை இல்லை என சொன்னதன் அடிப்படையில் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 193/2021
Prosecution side witness for P.W.3

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. ராஜன்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.03.2026**

A1, A2 are present.

**முதல் விசாரணை:–**

நான் கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் தூத்துக்குடி மாவட்டம், பண்டாரவிளை மாணிக்கம் நாடார் தெருவில் வாடகைக்கு குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன செல்வகுமார் என்ற செல்லக்குட்டி எனக்கு தெரியும். அவர் எனது ஊர்க்காரர். ஆஜர் எதிரிகளை தெரியும், ஆனால் எனக்கு பழக்கம் கிடையாது. எங்கள் ஊரை சேர்ந்தவர்கள்தான். ஆஜர் எதிரிகளுக்கும், இறந்துபோன செல்வகுமாருக்கும் என்ன பிரச்சனை என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. செல்வகுமார் கொலை வழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும், நான் என்ன நேரில் பார்த்தேன் என்றால் எனக்கு ஒன்றும் தெரியாது. நான் எதையும் நேரில் பார்க்கவில்லை. சாட்சி அ.சா.1 ஆரோன் தெரியும். சாட்சிகள் தர்மராஜ், சதிஷ், குரு ஆகியோர்களை தெரியும், அவர்களும் எங்கள் ஊர்க்காரர்கள்தான். செல்வகுமார் கொலையை நான் நேரில் பார்க்கவில்லை. எனக்கு ஒன்றும் தெரியாது. இந்த வழக்கு

சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. செல்வகுமார் எப்படி இறந்தான் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எதையும் கேள்விப்படவும் இல்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 2019 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் எங்கள் ஊர் இந்து நாடார் சங்கத்தின் அருகே வைத்து எங்கள் ஊரை சேர்ந்த விக்னேஷ் மற்றும் ராஜாசிங் இருவரும் கம்பால் இறந்துபோன செல்வகுமாரை அடித்துவிட்டார்கள் என்றும், அதனால் அவர்கள் மீது ஏரல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்து இருவரையும் சிறையில் அடைத்தார்கள் என்றும், பின்பு அந்த இருவரையும் அவரது நெருங்கிய நண்பரான உத்தரகுமார் என்பவர் இருவரையும் ஜாமீனில் வெளியே எடுத்தார் என்றும், இதனால் செல்வகுமார், உத்தரகுமார் மீது கோபம் கொண்டு அதே 2019 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் அதே இடத்தில் வைத்து செல்வகுமார், உத்தரகுமாரை அடித்தது சம்மந்தமாக உத்தரகுமாரின் அண்ணன் தங்கராஜ், செல்வகுமார் என்ற செல்லக்குட்டி மீது ஏரல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அவன் மீதும் கேஸ் போட்டார்கள் என்றும், இதனால் மாறி மாறி அவர்களுக்கிடையே விரோதம் இருந்து வந்ததால் 27.12.2020 ஆம் தேதி சாயங்காலம் நானும் எங்கள் ஊரை சேர்ந்த சதிஷ், தர்மராஜ், குருசித்திரங்கன், ஆகியோர்கள் நாங்கள் வழக்கமாக தண்ணி அடிக்கக்கூடிய எங்கள் ஊர் மேல பனங்காடு யோவான் பதநீர் காய்ச்சும் விடிலுக்கு வடபுறம் உள்ள தங்கபாண்டி நாடார் என்பவரின் பனங்காட்டிற்கு சென்று மது அருந்திக்கொண்டிருந்தோம் என்றும்,

அப்போது மேற்படி அ.சா.1 ஆரோனும் இறந்துபோன செல்வகுமார் என்ற செல்லகுட்டியும் TN92 B 1404 என்ற பஜாஜ் பல்சர் பைக்கில் தண்ணி அடிப்பதற்காக வந்தார்கள் என்றும், நாங்கள் அனைவரும் சேர்ந்து மது அருந்தி கொண்டிருக்கும்போது சாயங்காலம் சுமார் 6.00 மணியளவில் மேற்படி ஆஜர் எதிரிகளான மேற்படி உத்தரகுமாரின் உடன் பிறந்த சகோதரர்களான பட்டுப்பாண்டியும், அருண்குமார் என்ற பெருமாளும் கையில் உருட்டு சவுக்கு கம்புமற்றும் இரும்பு பைப்புடன் TN69 AA 5593 என்ற பதிவெண் கொண்ட Hero Honda splender plus பைக்கில் அங்கு வந்தார்கள் என்றும், வந்தவர்கள் செல்வகுமார் என்ற செல்லக்குட்டியை பார்த்து ஏல தேவடியா மவனே நீதானே என் தம்பியை அடித்து கொல்ல பார்த்த கூதிமவனே நீ உயிரோடு இருக்ககூடாது இதோடு செத்து தொலை என்று சொல்லி மேற்படி 1ம் எதிரி பட்டுப்பாண்டி தன் கையிலிருந்த கம்பால் செல்வகுமாரின் தலையின் முன்பகுதியில் இடது பக்கம் ஓங்கி அடித்ததில் இடது பக்கம் நெற்றிவரை பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், மேற்படி 2ம் எதிரி அருண்குமார் என்ற பெருமாள் தன் கையில் வைத்திருந்த இரும்பு பைப்பால் செல்வகுமாரின் முகத்தில் ஓங்கி அடித்ததில் இடது பக்க நாடியிலும், இடது பக்க கீழ்உதட்டியிலும் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், பின்னர் அவர்கள் இருவரும் சேர்ந்து செல்வகுமாரின் முகத்தில் மாறி மாறி அடித்ததில் அவரது முன்னந்தலை இடது பக்கம் வலது கண் புருவம் மற்றும் தலை சிதைந்து கீழே சாய்ந்து விட்டார் என்றும், அதை பார்த்த நானும், என்னுடன்இருந்த ஆரோன், சதிஷ், குருசித்தரங்கன், தர்மராஜ், தங்கவேல் ஆகியோர்கள் அவர்கள் இருவரையும் சத்தம் போடவும், இருவரும் ஏல புண்ட மக்களா நீங்களும் கிட்டே வந்தால் உங்களையும் அடித்து கொன்றுவிடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்து மரண பயத்தை ஏற்படுத்திவிட்டு பட்டுபாண்டி

வைத்திருந்த கம்பை செல்வகுமார் மீது வீசிவிட்டு, அருண்குமார் என்ற பெருமாள் வைத்திருந்த இரும்பு பைப்புடன் அவர்கள் வந்த பைக்கிலேயே ஏறி சென்றுவிட்டார்கள் என்றும், மேற்படி எதிரிகள் இருவரும் செல்வகுமாரை அடித்ததில் அவன் தலை சிதைந்து அந்த இடத்திலேயே இறந்துபோய்விட்டான் என்றும், இது சம்மந்தமாக மேற்படி ஆரோன் எதிரிகள் இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க ஏரல் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சென்றார் என்பதை தெரிந்து கொண்டோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு நாங்களும் எதிரிகளும் ஒரேஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்துபொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. <u>(எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு அளித்தபோது குறுக்குவிசாரணை இல்லை என சொன்னதன் அடிப்படையில் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 193/2021
Prosecution side witness for P.W.4

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. குரு சித்தரங்கன் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.03.2026**

A1, A2 are present.

<u>**முதல் விசாரணை:–**</u>

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், பண்டாரவிளை சித்தர் தெருவில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன செல்வகுமார் என்ற செல்லக்குட்டி எனக்கு தெரியும். அவர் எனது ஊர்க்காரர். ஆஜர் எதிரிகளை தெரியும், எங்கள் ஊரை சேர்ந்தவர்கள்தான். ஆஜர் எதிரிகளுக்கும், இறந்துபோன செல்வகுமாருக்கும் என்ன பிரச்சனை என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. செல்வகுமார் கொலை வழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும், நான் என்ன நேரில் பார்த்தேன் என்றால் எனக்கு ஒன்றும் தெரியாது. நான் எதையும் நேரில் பார்க்கவில்லை. சாட்சி அ.சா.1 ஆரோன் தெரியும். சாட்சிகள் தர்மராஜ், சதிஷ், ராஜன் ஆகியோர்களை தெரியும், அவர்களும் எங்கள் ஊர்க்காரர்கள்தான். செல்வகுமார் கொலையை நான் நேரில் பார்க்கவில்லை. எனக்கு ஒன்றும் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. செல்வகுமார் எப்படி

இறந்தான் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எதையும் கேள்விப்படவும் இல்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 2019 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் எங்கள் ஊர் இந்து நாடார் சங்கத்தின் அருகே வைத்து எங்கள் ஊரை சேர்ந்த விக்னேஷ் மற்றும் ராஜாசிங் இருவரும் கம்பால் இறந்துபோன செல்வகுமாரை அடித்துவிட்டார்கள் என்றும், அதனால் அவர்கள் மீது ஏரல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்து இருவரையும் சிறையில் அடைத்தார்கள் என்றும், பின்பு அந்த இருவரையும் அவரது நெருங்கிய நண்பரான உத்தரகுமார் என்பவர் இருவரையும் ஜாமீனில் வெளியே எடுத்தார் என்றும், இதனால் செல்வகுமார், உத்தரகுமார் மீது கோபம் கொண்டு அதே 2019 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் அதே இடத்தில் வைத்து செல்வகுமார், உத்தரகுமாரை அடித்தது சம்மந்தமாக உத்தரகுமாரின் அண்ணன் தங்கராஜ், செல்வகுமார் என்ற செல்லக்குட்டி மீது ஏரல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அவன் மீதும் கேஸ் போட்டார்கள் என்றும், இதனால் மாறி மாறி அவர்களுக்கிடையே விரோதம் இருந்து வந்ததால் 27.12.2020 ஆம் தேதி சாயங்காலம் நானும் எங்கள் ஊரை சேர்ந்த சதிஷ், தர்மராஜ், ராஜன், ஆகியோர்கள் நாங்கள் வழக்கமாக தண்ணி அடிக்கக்கூடிய எங்கள் ஊர் மேல பனங்காடு யோவான் பதநீர் காய்ச்சும் விடிலுக்கு வடபுறம் உள்ள தங்கபாண்டி நாடார் என்பவரின் பனங்காட்டிற்கு சென்று மது அருந்திக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது மேற்படி அ.சா.1 ஆரோனும் இறந்துபோன செல்வகுமார் என்ற செல்லகுட்டியும் TN92 B

1404 என்ற பஜாஜ் பல்சர் பைக்கில் தண்ணி அடிப்பதற்காக வந்தார்கள் என்றும், நாங்கள் அனைவரும் சேர்ந்து மது அருந்தி கொண்டிருக்கும்போது சாயங்காலம் சுமார் 6.00 மணியளவில் மேற்படி ஆஜர் எதிரிகளான மேற்படி உத்தரகுமாரின் உடன் பிறந்த சகோதரர்களான பட்டுப்பாண்டியும், அருண்குமார் என்ற பெருமாளும் கையில் உருட்டு சவுக்கு கம்புமற்றும் இரும்பு பைப்புடன் TN69 AA 5593 என்ற பதிவெண் கொண்ட Hero Honda splender plus பைக்கில் அங்கு வந்தார்கள் என்றும், வந்தவர்கள் செல்வகுமார் என்ற செல்லக்குட்டியை பார்த்து ஏல தேவடியா மவனே நீதானே என் தம்பியை அடித்து கொல்ல பார்த்த கூதிமவனே நீ உயிரோடு இருக்ககூடாது இதோடு செத்து தொலை என்று சொல்லி மேற்படி 1ம் எதிரி பட்டுப்பாண்டி தன் கையிலிருந்த கம்பால் செல்வகுமாரின் தலையின் முன்பகுதியில் இடது பக்கம் ஓங்கி அடித்ததில் இடது பக்கம் நெற்றிவரை பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், மேற்படி 2ம் எதிரி அருண்குமார் என்ற பெருமாள் தன் கையில் வைத்திருந்த இரும்பு பைப்பால் செல்வகுமாரின் முகத்தில் ஓங்கி அடித்ததில் இடது பக்க நாடியிலும், இடது பக்க கீழ்உதட்டியிலும் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், பின்னர் அவர்கள் இருவரும் சேர்ந்து செல்வகுமாரின் முகத்தில் மாறி மாறி அடித்ததில் அவரது முன்னந்தலை இடது பக்கம் வலது கண் புருவம் மற்றும் தலை சிதைந்து கீழே சாய்ந்து விட்டார் என்றும், அதை பார்த்த நானும், என்னுடன்இருந்த ஆரோன், சதிஷ், ராஜன், தர்மராஜ், தங்கவேல் ஆகியோர்கள் அவர்கள் இருவரையும் சத்தம் போடவும், இருவரும் ஏல புண்ட மக்களா நீங்களும் கிட்டே வந்தால் உங்களையும் அடித்து கொன்றுவிடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்து மரண பயத்தை ஏற்படுத்திவிட்டு பட்டுபாண்டி வைத்திருந்த கம்பை செல்வகுமார் மீது வீசிவிட்டு, அருண்குமார் என்ற பெருமாள்

வைத்திருந்த இரும்பு பைப்புடன் அவர்கள் வந்த பைக்கிலேயே ஏறி சென்றுவிட்டார்கள் என்றும், மேற்படி எதிரிகள் இருவரும் செல்வகுமாரை அடித்ததில் அவன் தலை சிதைந்து அந்த இடத்திலேயே இறந்துபோய்விட்டான் என்றும், இது சம்மந்தமாக மேற்படி ஆரோன் எதிரிகள் இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க ஏரல் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சென்றார் என்பதை தெரிந்து கொண்டோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு நாங்களும் எதிரிகளும் ஒரேஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்துபொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. (எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு அளித்தபோது குறுக்குவிசாரணை இல்லை என சொன்னதன் அடிப்படையில் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)